பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**12 03 2026 Thursday 7 15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்கள் விநியோகம் தடையின்றி மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய எண்ணெய் கழகம் தெரிவித்துள்ளது.

2. வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சருடன் அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்தினார்.

3. தமிழகத்தில் **30** மை பாரத் மையங்கள் செயல்பட்டு வருவதாக இளையோர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

4. ரயில் பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

5. கொல்கத்தா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- - இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>>

நாட்டில் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்கள் விநியோகம் தடையின்றி மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய எண்ணெய் கழகம் தெரிவித்துள்ளது.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள பதிவில், நாட்டில் உள்ள இந்திய எண்ணெய் கழகத்தின் அனைத்து பெட்ரோல் **Bunk**-குகளும் செயல்பட்டு வருவதாக கூறியுள்ளது.

மக்கள் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், பதற்றமடைய வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அரசின் அறிக்கைகளை பின்பற்றுமாறு இந்திய எண்ணெய் கழகம் தெரிவித்துள்ளது.

வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர்கள் காலதாமதமின்றி விநியோகிக்கப்படுவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில், பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதற்கு அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்த அறிக்கை ஒன்றை தாக்கல் செய்து பேசிய அவர், நாட்டில் உள்ள **33**

கோடி குடும்பங்களுக்கு தடையற்ற சமையல் எரிவாயு விநியோகம் நடைபெற்று வருவதாக கூறினார்.

உலக அளவில் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உள்நாட்டில் மக்களுக்கு எரிபொருள் சிரமமின்றி கிடைக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் 100 சதவீதம் உற்பத்தி உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய 28 சதவீதம் எல் பி ஜி எரிவாயு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னுரிமை அடிப்படையில் மருத்துவமனைகள் உள்ளிட்டவற்றுக்கு வணிக ரீதியிலான எரிவாயு சிலிண்டர்கள் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அமெரிக்கா, நார்வே, கனடா, அல்ஜீரியா, ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்து கப்பல் மூலம் பெட்ரோலியப் பொருட்கள் இறக்குமதி

செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

<<<<<>>>>>

உலகின் நான்காவது பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நாடாக திகழும் இந்தியாவில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என்று மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சகத்தின் இணைச் செயலர் திருமதி சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்காசிய நாடுகளில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, எரிபொருள் இறக்குமதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை சமாளிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்.

உள்நாட்டு சமையல் எரிவாயு தேவை முழு அளவில் பூர்த்தி செய்யப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

**60** சதவீதம் எல் பி ஜி எரிவாயு **Hormus** நீரிணை வழியாக இறக்குமதி செய்து வருவதாக அவர் கூறினார்.

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் சார்பில், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட சில்லரை எரிவாயு விற்பனை முகவர்கள் செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஒரு நாளைக்கு 50 லட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வீடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக கூறிய திருமதி சுஜாதா சர்மா, எப்பகுதியிலும் பற்றாக்குறை குறித்த தகவல் இல்லை என்றும் தெரிவித்தார்.

<<<<<>>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் Seyed Abbas-வுடன் பல்வேறு விஷயங்கள் குறித்து தொலைபேசி மூலம் ஆலோசனை மேற்கொண்டு வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், எரிசக்தி பாதுகாப்பு, கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதித்ததாக கூறினார்.

ஈரானில் 9 ஆயிரம் இந்தியர்கள் இருப்பதாக கூறிய அவர், தலைநகர் டெஹ்ரானில் இருந்து இந்தியர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஈரானிலிருந்து, இந்தியர்கள் அஜர்பைஜான், அர்மேனியா எல்லை வழியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கான அனைத்து உதவிகளும் வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

மேற்காசிய பிரச்சினை குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, வளைகுடா நாடுகளின் தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை மூலம் அமைதியை கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தியதாக திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறினார்.

பங்களாதேஷ், இலங்கை, மாலத்தீவு நாடுகள் இந்தியாவிடமிருந்து பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், பங்களாதேஷ் நாட்டுக்கு கடந்த 2017-ஆம் ஆண்டிலிருந்து இந்தியா, டீசல் ஏற்றுமதி செய்து வருவதாக குறிப்பிட்டார்.

இலங்கை மற்றும் மாலத்தீவு நாடுகளுக்கு பெட்ரோலியப் பொருட்கள் ஏற்றுமதி செய்வது குறித்து பரிசீலித்து வருவதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<<>>>>>

ரயில் பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தி செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், ரயில் ஓட்டுநர்களின் உதவிக்காக **Tri-netra** செயலி பயன்படுத்தப்படுவதாக கூறினார்.

இதன்மூலம், பனிக்காலங்களில் விபத்தில்லாமல் ரயில்களை இயக்க இந்த செயலி உதவிகரமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

ரயில் தண்டவாளங்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் 30 மை பாரத் மையங்கள் செயல்பட்டு வருவதாக இளையோர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நாடு முழுவதும் 623 மை பாரத் மையங்கள் தற்போது செயல்பாட்டில் உள்ளதாக கூறினார்.

இந்த மையங்களில் இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல், திறன் மேம்பாட்டுக்கான பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நடப்பு நிதியாண்டில் மை பாரத் மையங்களுக்காக 423 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், இதில் தமிழகத்தில் உள்ள மை பாரத் மையங்களுக்காக 21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<>>>>>

மக்களவையில் இன்று துணை மானியக்கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.

2 லட்சத்து 81 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் செலவினங்களுக்கான துணை மானியக்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இதுதொடர்பான விவாதத்தை தொடங்கிவைத்து பேசிய பிஜேபி உறுப்பினர் திரு ஜெகதாம்பிகா பால், மேற்காசியாவில் நிலவும் பதற்றம் காரணமாக கச்சா எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 88 டாலரிலிருந்து 119 டாலராக அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

இதனையடுத்து, உரம், போக்குவரத்து, எரிவாயு செலவு அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

விவசாயிகளுக்கு மத்திய அரசு உர மானிய வழங்கி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிதியுதவி அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மேலும், நாடாளுமன்றத் தொகுதி வளர்ச்சி திட்டத்துக்கான நிதி ஐந்து கோடி ரூபாயிலிருந்து, 25 கோடி ரூபாயாக அதிகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, தொடர்ந்து நாடாளுமன்ற விதிகளையும், மரபுகளையும் மீறுவதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவையில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு குறித்து பேச வேண்டும் என்று கூறிய திரு ராகுல்காந்திக்கு அதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டபோது தொடர்பில்லாத, தேவையில்லாத விஷயங்களை பேசியதாக கூறினார்.

அடிப்படையில்லாத தகவல்களை கூறுவதால், நாடாளுமன்றத்தின் நேரம் வீணடிக்கப்படுவதுடன், நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி, சமையல் எரிவாயு விநியோகம் தொடர்பாக அளித்த அறிக்கையில், தெளிவான விளக்கங்கள் கூறப்பட்டுள்ளதாகவும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தீவிரவாதம் மனித உரிமைகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் என்று மேற்கத்திய நாடுகளுக்கான வெளியுறவுத்துறை செயலர் திரு **Sibi George** தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் ஐ நா -வின் மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றிய அவர், உலக நாடுகள் தீவிரவாதத்துக்கு எதிராக ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, மகளிருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், தேர்தலில் கூடுதல் வாக்காளர்கள் வாக்களிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

மேற்காசிய பகுதியிலிருந்து, **Jawahar Dweep** கச்சா எண்ணெய் கப்பல் **Hormuz** நீரிணை வழியாக மும்பை வந்தடைந்தது.

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் தாக்குதல் நடத்தியதற்குபின் **Hormuz** நீரிணை வழியாக வரும் முதல் கச்சா எண்ணெய் கப்பல் இதுவாகும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கறார்.

இந்த கப்பலில் ஒரு லட்சத்து **35** ஆயிரத்து **335** மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் மும்பை துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டது.

<<<<<>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

கொல்கத்தா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Karan Singh** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-2, 7-6** என்ற செட் கணக்கில், ரஷ்யாவின் **Bekkhan Atlangeriev** -வை வென்றார்.

இப்போட்டியில், **Manish Suresh Kumar, Sanjeev Shanmugam** ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

--------------

**Yangon-**ல் நடைபெற்ற **17** வயதுக்கு உட்பட்டோருக்கான சர்வதேச மகளிர் நட்புணர்வு கால்பந்து போட்டியில், இந்தியா **2-0** என்ற கோல் கணக்கில் மியான்மரை வென்றது.

------------------

ருவாண்டாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தாந்த் பாந்தியா — பல்கேரியாவின் **Alexander Donski** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-4, 7-6** என்ற செட் கணக்கில், பிரான்சின் **Florent Bax —** துனிஷியாவின் **Aziz Quakaa** இணையை வென்றது.

**<<<<<END>>>>>**